# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் 'A+' தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.


தொலைபேசி : 0431- 2407016/ 2407060
தொலை நகலி: 0431 - 2407444
மின்னஞ்சல் : coe@bdu.ac.in
வலைதளம் : www.bdu.ac.in

**முனைவர் க.துரையரசன், எம்.ஏ.,எம்.எட்., எ஼.பில்., பிஎச்.டி.,**
**தேர்வு நெறியாளர்**


---

ந.க. எண்: தேபி/இளநிலை/செய்முறைத் தேர்வுகள்/ஏப்ரல் 2020 நாள்: 25.01.2020

பெறுபவர்

முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

**பொருள்**: ஏப்ரல் 2020–ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலை பட்டப்படிப்பு பாடங்களுக்கான செய்முறைத் தேர்வுகளுக்கான தேர்வு கால அட்டவணை - தொடர்பாக

---------

நடைபெறவிருக்கும் ஏப்ரல் 2020 பல்கலைக்கழக இளநிலை பட்டப்படிப்புகளுக்கான செய்முறைத் தேர்வுகளுக்கான தேர்வுகால அட்டவணை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | பாடப்பிரிவுகள் | தேர்வுகள் துவங்கும் நாள் | தேர்வுகள் முடிவுறும் நாள் | **செய்முறைத் தேர்வின் அக மற்றும் புற மதிப்பெண்** பட்டியல் (Hard Copy Duly signed by both Examiners and Forwarded by Principal through HOD) வந்து சேர வேண்டிய நாள் | அனைத்து **எழுத்துத் தேர்விற்கான அக மதிப்பெண்** பட்டியல் வந்து சேரவேண்டிய நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | B.A/BBA/B.Com., | 09.03.2020 | 11.03.2020 | **14.03.2020** | **17.04.2020** |
| 2. | B.Sc., | 09.03.2020 | 24.03.2020 | **27.03.2020** | **17.04.2020** |

செய்முறைத் தேர்வுகள் (Practical exams for B.A., BBA., B.Sc.,& B.Com Courses) நடத்திடும் பொருட்டு அதற்கான செய்முறைத் தேர்வு காலஅட்டவணை மூன்று நகல்கள் தயார் செய்து **12.02.2020 ஆம் தேதிக்குள்** இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி ஒப்புதல் பெற்ற பிறகே செய்முறைத் தேர்வுகளை நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. காலதாமதமாகக் கிடைக்கப்பெறும் கால அட்டவணைகள் பரிசீலிக்கப்படமாட்டாது என தெரிவிக்கலாகிறது.

மேலும், பல்கலைக்கழக ODD Semester/EVEN Semester செய்முறைத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவ/மாணவிகள் அந்தந்த ODD/EVEN பருவத்தேர்வில்தான் தேர்வு (Practical Examinations) எழுத இயலும் என்பதையும், ஆறாம் பருவ மாணவர்களுக்கு, செய்முறைத் தேர்வில் நிலுவைத்தாள்கள் எப்பருவத்தில் இருப்பினும் அவர்கள் தங்களது ஆறாம் பருவத்தேர்வில் அனைத்தையும் எழுதலாம் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனைத் தங்கள் கல்லூாயில் பயிலும் மாணவ/மாணவிகளுக்கும், தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களின் அகமதிப்பீட்டு மதிப்பெண் பட்டியல்கள் உரிய தேதிக்குள் இணையதளத்தின் வாயிலாகவும் (www.bdu.ac.in/exam-esubmit) மற்றும் அஞ்சல் வழியாகவும் தேர்வு நெறியாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், 2019–2020-ல் சேர்க்கை பெற்ற முதலாமாண்டு மாணவர்களுக்கான இரண்டாம் பருவத் தேர்வு விவரங்களை, முதல் பருவத் தேர்விற்கு விண்ணப்பம் செய்ததைப் போலவே தனியாக பல்கலைக்கழக 'New Portal'-ல் பதிவேற்றம் செய்யப்படவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய காலத்திற்குள் மதிப்பெண்களை அனுப்பிவைத்து மாணவ/மாணவியரின் தேர்வு முடிவுகள் விரைவாக வெளியிட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இக்கடிதம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

ஒ/ம். XXXXX

**தேர்வு நெறியாளர்**

**நகல்:**

1. இயக்குநர், தகவலியல் மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம்
2. மந்தனப்பிரிவு-I, பாரதிதாசன் பல்கலைக்கழகம்
3. மந்தனப்பிரிவு-II, பாரதிதாசன் பல்கலைக்கழகம்
4. கணக்குப்பிரிவு, பாரதிதாசன் பல்கலைக்கழகம்